**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 12/2024**

2025ம் வருடம் ஜுலை திங்கள் 25ம் நாள் வாதி தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு. V.மனோஜ்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திரு. மாரிச்சாமி (PW1) கிராமம்:
தகப்பனார் பெயர் : வழிவிட்டான் தொழில் :
வயது :

<u>முதல் விசாரணை:–</u>

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். என் தரப்பு வாய்மொழி சாட்சியத்தை எழுத்துமூலமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கு முழுமையாய் தெரிந்த மட்டிலும் உண்மை என்று உறுதி கூறி இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள விபரங்களை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. 20.05.1965ம் தேதியிட்ட 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 4 வரையிலான வாதிகளின் தந்தையுமான வழிவிட்டான் என்பவர் சேகு இப்ராஹிம் மகன் நயினா முகம்மது என்பவரிடம் தாவா சொத்தை கிரையம் பெற்றதற்கான கிரையப் பத்திரம் தமிழ்நாடு அரசு இணைய தளத்திலிருந்து எடுக்கப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 4 வரையிலான வாதிகளின் தந்தையுமான வழிவிட்டான் என்பவர் இறந்ததற்குண்டான இறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. வழிவிட்டான் என்பவருக்கு வாதிகள் வாரிசுதாரர்கள் என்பதற்குண்டான வாரிசு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 25.11.2015ம் தேதியிட்ட தாவா சொத்தின் ஒரு பகுதியை 2 முதல் 5 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு மோசடியாக எழுதிக்கொடுத்த ஆவண எண்.2715/2015 கொண்ட கிரையப் பத்திரம் தமிழ்நாடு அரசு இணைய

தளத்திலிருந்து எடுக்கப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 21.12.2016ம் தேதியிட்ட தாவா சொத்தின் மேலும் ஒரு பகுதியை 7 முதல் 10 வரையிலான பிரதிவாதிகள் 6ம் பிரதிவாதிக்கு மோசடியாக எழுதிக் கொடுத்த ஆவண எண்.1257/2016 கொண்ட கிரையப் பத்திரம் தமிழ்நாடு அரசு இணைய தளத்திலிருந்து எடுக்கப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 1ம் பிரதிவாதி பெயருக்கு தாவா சொத்தை பொறுத்து ஏற்பட்ட 9579 எண் கொண்ட பட்டா கணினி நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 6ம் பிரதிவாதி பெயருக்கு தாவா சொத்தை பொறுத்து ஏற்பட்ட 9578 எண் கொண்ட பட்டா கணினி நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 24.01.2024ம் தேதியிட்ட தாவா சொத்து குறித்த வில்லங்க சான்றிதழ் தமிழ்நாடு அரசு இணைய தளத்திலிருந்து எடுக்கப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(ஒம்./−திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.